(ஆ) நாகூர் பேருந்து நிலையத்தில் காத்திருந்த மாணவர்கள் தாக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, நாகூர் பேருந்து நிலையத்தில் பஸ்ஸிற்காகக் காத்திருந்த காரைக்கால் அறிஞர் அண்ணா அரசினர் கலைக்கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டதன் காரணமாக அங்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்க என்று ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானம் திரு. ஞானசம்பந்தம் அவர்கள் கொடுத்துள்ளார்கள். இது அரசின் அன்றாட அலுவல்களுக்குட்பட்ட ஒன்றாதலின் இதற்கு நான் அனுமதி மறுக்கிறேன்.

(இ) தூத்துக்குடியில் திரு. பரமசிவம் கொலை செய்யப்பட்டதும், அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருவாளர்கள் கோமதி சங்கர தீட்சதர், டி. மார்டின், என். எஸ். வி. சித்தன், க. ராம மூர்த்தி ஆகியோர் கடந்த அக்டோபர் மாதம் தூத்துக்குடியில் திரு. பரமசிவம் கொலை செய்யப்பட்டதும், அதனால் அங்கு ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும் விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கில்லாத காரணத்தினால் அவற்றை எடுத்துக்கொள்ள முடியாமையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு சென்னை மாநகர சிவில் நீதி மன்ற (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு சென்னை மாநகர சிவில் நீதிமன்ற (திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இம்மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம்மசோதா அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளை கள் (திருத்த) மசோதா (ச. பே. ம. எண் 45/1970).

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) மசோதா* (சட்டப்பேரவை மசோதா எண். 45/1970) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

---

*30—11—1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.